நற்பணியே நம் வாழ்வு

சீடு அறக்கட்டளையின்

# புதுயுகம்

மாணவர் தனிச்சுற்று மாத இதழ்

உலகு 1
ஏப்ரல் 2007
பணி மடல்: 2

மக்கு பயங்கர மக்கு...
A Sugarcane Story
நம்ம ஊரு - மதுரை
எம்.பி. எம்.எல்.ஏ. ஆக எக்ஸாம்
குருதியில் மலர்ந்த -புத்தகத்திலிருந்து
சரியா படிக்க.. சிந்திக்க.. டிப்ஸ்
சொந்த காலில் நில்லுங்கள் - கதை
விடுமுறை முகாம் - விபரம் உள்ளே..

[illegible] ரூ.2/ [illegible] ரூ.5/ [illegible] ரூ.10/

# விதைகள் வீரியமானவை

சின்னசின்ன கைககள் கூடி நடத்துகின்ற விழாவிற்காக வெகு ஆவலாய் நாம் கரும்பாலை மாநகராட்சி பள்ளிக்கு சென்றிருந்தோம். ஆம் அது சீடு வெளியீடாகிய புதுயுகம் மாணவர் தனிச்சுற்று இதழின் அறிமுக விழா. மதிய வேளையாகிலும் குழந்தைகள் நூற்றுக்கணக்கில் கூடியிருந்தனர். விழா நடந்த விதம், 11.3.2007 ஞாயிறு நாளை நமக்கு சிறப்பாக்கித் தந்தது. குழந்தைகளின் அன்பே தெய்வம், காலம் நம் கையில்தானே என்ற குரலிசைகள் நம்மை தலையாட்ட வைத்தன. ஒரு புத்தகம் நம் கையில் கிடைத்தால் நம் தனிமையும், தவிப்பும் தானாக மடியும் வரிகள் விழாவிற்கு பொருத்தமாய் அமைந்தன.

வரவேற்புரை சீடு அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் A.S.கார்த்திக் பாரதி நிகழ்த்த வருகை தந்த விருந்தினர்களை சீடுகுழந்தைகள் மலர்கள் வழங்கி வரவேற்றனர். புதுயுகம் இதழ் நோக்கம் வரலாறு குறித்து C.T.பிரேம்குமார் பேசுகையில் கரும்பாலை, மானகிரி, சம்பகுடி, தத்தனேரி, P.T.காலனி, இந்திராநகர், எஸ்.எம்.நகர் பகுதிகளைச் சேர்ந்த குழந்தைகளின் படைப்பாற்றல்களை வெளிக்கொணர்வதற்கான தளமாக புதுயுகம் அமையும் என்றும் 7 ஆண்டுகளில் கையெழுத்து பிரதிகளில் எங்களின் படைப்புகளை கண்டு வந்த நாங்கள் அச்சில் அவற்றை பார்க்கும் போது எழுகின்ற



மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை என்றார். தியாகராஜர் பொறியியல் கல்லூரி பேராசிரியர் **குமாரசாமி** புதுயுகம் முதல் இதழை வெளியிட சீடு குழந்தைகள் உரிமைகள் இயக்க தலைவர் **சுரேஷ்ராஜன்** பெற்றுக் கொண்டார்.

பேராசிரியர் குமாரசாமி புதுயுகம் இதழில் பெரும்பாலும் நேர்மாறான சிந்தனைகள் நிரம்பியிருக்கிறது. சில குறைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்று எடுத்துக்காட்டி கூறினார். ஏறக்குறைய புத்தகத்தின் அனைத்துப் பகுதிகளையும் நுணுக்கமாக ஆராய்ந்து, இளம் படைப்பாளிகளை விழா அரங்கிலேயே குறிப்பிட்டு பாராட்டினார். மேலும் தலைமை விருந்தினராக வந்திருந்த தமிழ்சுடர் நாளிதழின் செய்தி ஆசிரியர் **அந்தோணி சாமி** அவர்கள் "இளம் மூளைகள் சிந்திப்பவற்றை பதிவு செய்து வெளிவந்துள்ள இவ்விதழ் சமூகத்தை ஆக்கமுள்ள வழிகளில் கொண்டு செல்வதற்கான மிகச்சிறந்த பாதை" என குழந்தைகளை உற்சாகப்படுத்தி பேசினார்.

விழாவிற்கு மாநகராட்சி உறுப்பினர் திரு.**கருப்பையா** மற்றும் கரும்பாலை நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியை **அருண்மொழி மதுரம்** மற்றும் டாக்டர்.**ஆடம்ஸ்** ஆகியோர்களின் வருகை புதுயுகம் படைப்பாளிகளையும், வாசகர்களையும் உற்சாகப்படுத்தின. விழாவில் வாண்டுகளின் கண்கவர் கலை நிகழ்வுகள் நடைபெற்றன. "மலர்கின்ற உலகை நற்பணிகளால் காப்போம்" என்ற புதுயுகத்தின் முழக்கம், அன்பு, பரிவு, தோழமை, நகைச்சுவையுணர்வு, பாட்டு போன்றவற்றை இயல்பாக கொண்ட குழந்தைகள் பங்கேற்கும் விழா என்று உணர்த்தியது.



புதுயுகம் படைப்பாளிகள் நல்ல விதைகள், வீரியமான விதைகள் உண்மை அதில் மிகையில்லை. இவ்விதைகள் புதிய விருட்சங்களை உருவாக்கும் என்ற புதிய நம்பிக்கையை நமக்கு தந்தது. விழாவிற்கான ஏற்பாட்டை ஆசிரியர் குழு செய்திருந்தது. இயக்குநர் முத்துகுமார் விழாவை ஒருங்கிணைக்க, செல்வி. தங்கலெட்சுமியின் நன்றியுரையுடன் விழா இனிதே முடிவடைந்தது. நாம் அடுத்த இதழ் எப்ப வரும் என்ற நினைவுடன் வீடு திரும்பினோம்.

12.03.2007

சி.அருண்
சீடு நண்பர்

# பாடி மகிழ்க

## ஒரு புத்தகம் நம் கையில் கிடைத்தால்...

– முகில், TNSF

காலம் நம் கையில்தானே
காலம் நம் கையில்தானே
எதிர்காலம் நம் கையில்தானே
காலம் நம் கையில்தானே
எதிர்காலம் நம் கையில்தானே
காலம் நம் கையில்தானே

காற்றில் கலந்து வரும் மொழியில்
நீலக்கடலில் குதித்து வரும் அலையில்
வானில் சிரித்து வரும் நிலவில் (வானில்)
நாம் வாழ்வோம் வாழ்வோம் என்ற
கானத்தை கேளு (வாழ்வோம்)
தாதைய தாதைய தைய
தரிகிடத்தோம் தரிகிடத்தோம் (தாதைய)(காலம்)
ஆடை அணிகலன்கள் அழகா
இங்கு ஆடம்பர வாழ்க்கை அழகா (ஆடை)
அழகின் புது அர்த்தம் பழகு (அழகின்)
இனி உழைப்பும் உண்மையும்
கல்வியும் அழகு (உழைப்பும்)
தாதைய தாதைய தைய
தரிகிடத்தோம் தரிகிடத்தோம் (தாதைய) – (காலம்)
மலையை குடைந்து சிலை வடித்தோம்
சிறு மணலைக் கடைந்து
கலை படைத்தோம் (மலையை)
நிலவில் நடை பழகி களித்தோம் (நிலவில்)
இனி எண்ணையும் எழுத்தையும்
நம் கையால் தொடுவோம் (எண்ணையும்)
தாதைய தாதைய தைய தரிகிடத்தோம்
தரிகிடத்தோம் (தாதைய) (காலம்)
சின்னஞ்சிறிய கருந்தீவில் நாம்
தன்னந்தனியே இருந்தாலும் (சின்னஞ்சிறு)
ஒரு புத்தகம் நம்கையில் கிடைத்தால் (புத்தகம்)
நம் தனிமையும் தவிப்பும்
தானாக மடியும் (தனிமையும்)
தாதைய தாதைய தைய
தரிகிடத்தோம் தரிகிடத்தோம் (தாதைய)
(காலம்)




மூகாம்பிகா,
III Std.



சோழவந்தான் சிற்றுலா – படம் : முத்துக்குமார்





# டூர் போனோமே...

சோழவந்தான் ஜாலி உலா

நாங்க காலையில பஸ் ஏறி ட்ரெயின் நிற்கிற இடத்துக்கு போனோம். பஸ்ல ஜாலியா சிரிச்சி பேசிகிட்டே போனோம். ட்ரெயின் ஸ்டேஷனுக்கு போறப்ப ஒரே கூட்டமா இருந்துச்சு. எல்லோரும் **ட்ரெயின் ட்ரெயின்னு** கத்தினோம். நிறைய பெட்டி பெட்டியா உள்ள ஒரு ட்ரெயின் வந்துச்சி. எல்லோரும் **ஓ**என கத்திட்டு போய் ஏறினோம். கொஞ்சம் பேர் ட்ரெயின்ல கீழே உள்ள சேர்ரிலும் பாதி பேர் மாடி மாதிரி இருக்கிற சேர்ரிலும் உட்கார்ந்தோம். பிஸ்கெட், முறுக்கு இதெல்லாத்தையும் மாறி மாறி கொடுத்து சாப்பிட்டோம். நிறைய சீடு பாடல்கள் பாடினோம். முத்துக்குமார் அண்ணா **கரும்பாலை பக்கத்துல நம்மகடை இட்லி கடை** என்ற பாட்டை ஜாலியாக சொல்லிக்கொடுத்தார்.

ட்ரெயின் போறப்ப ஜன்னல் வழியா, தண்ணீ இல்லாம நிறைய மணல் இருக்கிற வைக ஆறு, மாமரம், தென்னமரம், காஞ்ச வயல், பச்சையாய் இருக்கிற வயல் இதெல்லாம் சந்தோஷமாக வேடிக்கை பார்த்துகிட்டே போனோம். ட்ரெயின் நிக்கிறப்பெல்லாம் கூடல்நகர், சமயநல்லூர், சோழவந்தான்னு பெரிய பெரிய உள்ள போர்டெல்லாம் வாசிச்சோம். ட்ரெயின் நின்னதும் ஹேனு கூச்சல் போட்டுட்டு திமுதிமுனு இறங்கினோம். ஏன்னா கொஞ்ச நேரம் தான் ட்ரெயின் அங்க நிற்கும். பின்பு ஊருக்குள்ளே ரெண்டு ரெண்டு பேரா கைக்கோர்த்து நடந்தோம்.

வேடிக்கை பார்த்துக்கிட்டே வைக ஆறை அடைந்தோம். அங்க அகலமா, பெரிசா எங்க பார்த்தாலும் மணல் உள்ள வைகை ஆற்றை மணல காலால உதறிட்டு தள்ளிகிட்டு கையால அள்ளி வீசிட்டு பெரிய தென்னந்தோப்பை அடைஞ்சோம். அங்கு அழகா சுத்தமான தண்ணீர் உள்ள கிணறு இருந்துச்சு. அழகான குட்டி பிள்ளையார் கோயில் இருந்துச்சு. சாப்பாடு, தண்ணீர் இதெல்லாம் அங்க வைச்சுட்டு ஆசையாய், ஆசையாய் ஸ்வீட்டான தண்ணியை குடிச்சோம். அப்புறம் எல்லோரும் கொஞ்ச தூரம் நடந்துபோனோம். அங்க ஓடை போயிட்டு இருந்துச்சா.. அவ்வளவுதான்

வாண்டுகள் எல்லாம் தண்ணீல பாய, பாவம் மீனெல்லாம் அங்கிட்டும் இங்கிட்டும் ஓடிச்சு. சும்மா நாங்க இருப்போமோ. எல்லோரும் மீனை பிடிக்க பார்த்தோம். சிலர் டைவ் அடிச்சாங்க. சிலர் முங்கி முங்கி குளிச்சாங்க. அய்யர் சாமி ப்ளாஸ்டிக் டம்ளர்ல அள்ளி அள்ளி குளிச்சான். சிரிப்பாய் இருந்துச்சு ஷேம் ஷேம். இரண்டு வாண்டுக டிரெஸ்ஸே போடாம குளிச்சாங்க. ஆனா யாரும் கேலி பண்ணல. குட்டி குட்டி மீனு பிடிச்சதுமே கார்த்திக் அண்ணன் அதெல்லாம் தண்ணீரில் விட்டுங்க பாவம்னார்.

அதனால் குட்டி மீன் பிடிச்சு பிடிச்சு தண்ணியிலே விட்டுட்டோம்.அந்த மீனெல்லாம் ஜாலியா ஓடினது பார்க்க ஒரே சந்தோஷம். ரொம்ப நேரம் தண்ணியிலே விளையாடினோம். பின்பு மனசே இல்லாம கரைக்கு போயி திரும்பி தென்னந்தோப்பு, வாழைதோப்ப வேடிக்கை பார்த்துட்டு போனோம். அங்க அணில், குயில் இதெல்லாம் இருந்துச்சு. அணில், குயில் போல கத்திக்கிட்டே போனோம். ஒரு இடத்துல வட்டமா உட்கார்ந்து டிபனை திறந்து சாப்பாட்டை மாறி மாறி கொடுத்து சாப்பிட்டோம். கலர் கலரா வேற வேற சாப்பாடு சாப்பிட ஓ ரொம்ப டேஸ்ட் ஆ இருந்துச்சு.

பின்பு எல்லோரும் செஸ், ஸ்கிப்பிங், கண்ணாமூச்சி விளையாண்டோம். முறுக்கு, பட்டாணி, பிஸ்கெட் சாப்பிட்டோம். கொண்டு வராதவங்களுக்கு கொண்டு வந்தவங்க கொடுத்தாங்க. பெரிய அண்ணன்கள் பெரிய மீனை கொண்டு வந்தாங்க. அதை கழுவி, ஒரு குச்சியில் குத்தி தீயில் சுட்டு சாப்பிட்டோம். செமடேஸ்ட். பெரிய அண்ணன்கள் தேங்காய் பிடுங்கி வந்து உடைச்சு தந்தாங்க, திகட்ட திகட்ட சாப்பிட்டோம்.. பின்பு சாயந்திரம் 4 மணிக்கு திரும்பி ட்ரெயின் ஏறி ஜாலியா கத்திட்டு பாட்டெல்லாம் பாடிகிட்டே மதுரை வந்தோம். அங்க டீ, பிஸ்கெட் சாப்பிட்டுட்டு எல்லோரும் வீட்டுக்கு போனோம்.

இந்த டூர் ஜாலியா, ஆட்டம் பாட்டமா இருந்ததுச்சு. ஸ்கூலல டூர் போக முடியாதவங்கெல்லாம் ட்ரெயின்ல வந்ததுக்கும், ஆத்துல குளிக்கிறதுக்கும் சிறந்த நாளா ஞாயித்துகிழமை (25.3.2007) அமைஞ்சுச்சு.



சொன்னது : A.துர்க்காதேவி V Std.
எழுதியது :K.அன்பரசன் B.A.,

## கதை... கதையோ...

- முத்தின கொண்டகாரி
  ஊரெல்லாம் சண்ட காரி?
- எங்க அப்பா சிவப்பு தண்ணிக்குள்ள
  போட்டா கருப்பு?
- எங்க அக்கா எத வைத்தாலும் சமைப்பா?
- நெட்ட நெட்ட காட்டுக்குள்ள எங்க அண்ணே
  குடை பிடித்து கொண்டிருக்கான்
- அவன் அடிபட்டு மற்றவர்களுக்கு
  ஆனந்தம் தருவான்
- மேலும் கீழும் போவான் வாழ்க்கைத்
  தத்துவம் சொல்வான்
- சின்னப் பெட்டிக்குள் சிப்பாய்ப் படை உரசினாலே
  போதும் உயிர் முடிந்து போவார்
- ஓங்கி வளர்ந்தவனை ஒடித்து கடித்தால்
  வாயெல்லாம் இனிக்கும்
- அழகான வாலுண்டு அனுமாரும்
  அல்ல அது என்ன?
- பானைச் சோறு பொங்கி வழிந்தாலும்
  பதம் பார்க்க மட்டுமே வந்தவர்கள்?

விடைகள் :
தீக்குச்சி
[illegible]
அடுப்பு
காளான்
மத்தளம்
ராட்டினம்
தீக்குச்சி
கரும்பு
பட்டம்
சுண்ணாம்பு



கவிதா
எஸ்.எம்.நகர்.

## Oh! Success!

*Oh! Success, you are achieved*
*when I dream.*
*Oh! success, you are achieved*
*when I plan.*
*Oh! success, you are achieved*
*when I concentrate*
*Oh! success, you are achieved*
*when I put*
*my heart and soul.*
*Oh! success, you are achieved,*
*when I work hard!*

- A.Meenakshi
Sambakudi.

## படித்ததில் பிடித்தது

ஆசையிலும் ஆசைப்பட்டேன் நான்
அர்த்தமுள்ள ஆசைப்பட்டேன்
ஆசையான ஆசையெல்லாம் அலையாய் போவதென்ன
நான் வேலை செய்யும் வீட்டில் எல்லாம்
சின்னப் பிள்ளை விளையாடும்
நானும் கூட சின்னப்பிள்ளை
விளையாட ஆசைப்பட்டேன்
என்னைத் தூக்க ஆசைப்பட்டேன் (ஆசையிலும்)

என்னைப் போல பிள்ளையெல்லாம்
பள்ளிக் கூடம் போகையில
என்னைப் பெத்த நேரம் பாரு
புள்ளக் கட்டத் தூக்கப் போறேன் (ஆசையிலும்)
ஊசி போடும், டாக்டராவேன்
சொல்லித்தரும் டீச்சராவேன்.
இராக்கெட்டையும் ஓட்டப்போறேன்
அத்தனையும் கனாச்சு
எச்சியல நிஜமாச்சு (ஆசையிலும்)

N.முனீஸ்வரி
சம்பக்குடி.

## நமது தமிழ்ப் பாட்டு

நல்ல, நல்ல பாட்டு
நமது தமிழ்ப் பாட்டு
உள்ளம் நிறையக் கேட்டு
உயிரை வளர்த்துப் பூட்டு
தெவிட்டத் தெவிட்டத் தனைக்கும்
தெவிட்டாமல் நாவ் சுவைக்கும்
வெல்லம் போல் இனிக்கும்
தென்றல் மட்டும் நிலைக்கும்

P.பாண்டி முருகேஸ்வரி
எம்பக்குடி.

> சாதனைகள் செய்ய சரித்திரம் படைக்க
> ஏழ்மை காரணமாகாது
> முயற்சியும் உழைப்பும் தேவை.

1. **ஆப்ரகாம் லிங்கன்**
   - ஏழை விறகு வெட்டியின் மகன்
2. **ஜோசப் ஸ்டாலின்**
   - செருப்பு தைப்பவரின் மகன்
3. **சாமுவேல் ஜான்சன்**
   - பழைய புத்தக வியாபாரியின் மகன்
4. **மேரிக்யூரி அம்மையார்**
   - வேலைக்காரியாக இருந்தவர்
5. **தாமஸ் ஆல்வா எடிசன்**
   - படகு கட்டுபவரின் மகன்
6. **கரிபால்டி** - ஏழை செம்படவரின் மகன்
7. **ஹென்றி ஃபோர்டு**
   - பண்ணைத் தொழிலாளியின் மகன்
8. **பாலகங்காதர திலகர்**
   - தொடக்கப்பள்ளி ஆசிரியரின் மகன்
9. **ஐன்ஸ்டீன்**
   - ஏழ்மையான குடும்பத்தைச் சார்ந்தவர்
10. **ஷேக்ஸ்பியர்**
    - குதிரை லாயத்தில் வேலை பார்த்தவர்
11. **டிக்கன்ஸ்**
    - பேப்பர் விற்று பிழைத்தவர்

## எனக்கு பிடித்த கலர்
## நீலக்கலர் சிகிச்சை,
## வெள்ளைக்கலர் சிகிச்சை

✓ பறவை இனத்தில் ஆந்தையால் மட்டுமே நீல நிறத்தை காணமுடியும்.

✓ கொசுக்கள் மற்ற நிறங்களை விட நீல நிறத்தால்தான் அதிகம் கவரப்படுகின்றன.

✓ நீலக்கல் என்று அழைக்கப்படுவனவற்றில் ஒன்று இதற்கு ஆங்கிலத்தில் சபையர் (sapphire) என்று பெயர்.

✓ ப்ளு மவுண்டெயின் ஆப் இந்தியா என்றழைக்கப்படுவது நீலகிரி மலை.

✓ நீலத்திமிங்கலத்தின் இதயம் நன்னீரில் ஒரு நிமிடத்திற்கு 30 தடவையும், மேற்பரப்பில் 60 தடவையும் துடிக்கின்றன.

- *வெள்ளைத் தங்கம் – பருத்தி*
- *வெள்ளை மாளிகை – அதிபர் மாளிகை* U.S.A.
- *வெள்ளை யானை நாடு – தாய்லாந்து*
- *வெள்ளை நகரம் – பெல்கிரேடு*
- *வெண்மைப் புரட்சி – பால் உற்பத்தி*

- சாரநாத்



- மல்லையன்

## மக்கு... பயங்கர மக்கு...

தமிழ்நாட்டுல கிடைக்கலய்யா
தண்ணீ பச்ச தண்ணீ
இங்க பாரினிலே கிடைக்குதய்யா
தண்ணீ சாராயத் தண்ணீ
பாக்கெட்டுல மூடி விக்குது
தண்ணி கலங்கல் தண்ணி
கர்நாடகாதான் கொடுக்க மறுக்குது
தண்ணீ காவிரி தண்ணீ
கழுவ கூட கிடைக்கலய்யா
தண்ணீ உப்பு தண்ணீ
வைகை ஆறு ஓடுது பார்
ஓரம் மதுரை ஓரம்
சுட்டிகள் விளையாடுது பார்
ஓரம் கரை யோரம்
பைப்குள்ள வர்றதுங்க
காத்து வெறும் காத்து
தமிழ்நாட்டுக்குள்ள இருக்கிற ஆறெல்லாம்
வெத்து வெறும் வெத்து
பாட்டிலில் விற்குது
பார் கோக்கு கலர் கோக்கு
அதை வாங்கி குடிக்கிறவன்தான்
மக்கு பயங்கர மக்கு

தழுவல் பாடல்
செ.படேல்



சிடு டிரஸ்ட் கலை நிகழ்வு,
படம் :சுந்தராஜன்

## Pongal : A Sugarcane Story

Once upon a time, the human converted a new person from the monkeys which were living in forests. They went under the nomadic life. After some years, they settled in a fertile area. They have grown crops, rice and also me.

Me? Who am I? Oh! You haven't known about me. I am a sugarcane. Did you taste me before? Today is Pongal. So, please eat any sugarcane and know about my greatness and sweetness.


Okey! Come back to the story. They grew too me. They worshipped that god is nature. So, they always prayed them and gave many gifts for the god.

After some times, the people worked hardly and maintained their family. They didn't have enough time to these works. So, they forgot to praise the lord. Thus the god was very angrily at these people.

So, in the world there was no rain and the people mostly occured by a drought.

The people argued to god. One day, the god appeared before the people. He said, "My loving people! you forget me for a long time. After the drought, you became to pray me! Now I excuse you. Then, I have a pleasure message for you, My people. I want to give a holy girl for the world. she will grow and do many rare and good

things for you. She will be in the in the first day of "Thai" month, by a lady between you. My blesses are always for you!". Then he disappeared.



Then the drought went and they became happy. They were very interest to see the holy girl.

...In a hut, a pregnet lady was sleeping. She is a widow. Her husband died in the 3rd month of her pregnet. She was very poor. She was passing the delivery time of her. In the first day Thai, she felt the pain. After some struggles, she had a beautiful girl.

Now the god appeared to the people and said, "Now the holy" girl was born in a hut for a widow lady. She will be doing better things for you. All the blessings for your life". At lost, the people found the hut and went up to it.

The lady was very afraid to see them. Then they told the lady what the god said. She was so happy. Then, the girl was named as "Thai" she was grown with kind and greatness.

Now she was a lady. Her mother wanted Thai to marry. But she liked to help the other people. So, she went out her home. The people said, "She is the god's daughter. I have to pray her". By this way, all the people came problems. Through the god's greatness, she solved and did many rare things for the people's benefits.

In some times, she helped the people to talk to the god. The people liked her very much. The god also liked Thai very much. The nature god was forgotten by the people. Against the god was so angrily.

To relief the god, Thai was hit on an idea. The people should prepare Pongal and give to the god. She concluded that to the people. The people said, "But, how do we prepare Pongal?". She said, "In our field, we grow many crops, rice and sugarcanes. Using like these things we are going to prepare the Pongal".

Then she explained to cook Pongal. At last, the pongal was gushing like the people's face and mind. The people have eaten. What a sweatness! The god was so surprised. Like all human, Thai also touched a death.

What a greatness! She died in the first day of Thai. To refer the sweetness and peaceful born, the people celebrates the first day of "Thai" as "Pongal", in an each year. To refer the sweetness and cheerful character, the people me too on that day.

Be with sweetness,
Live with sweetness,

**A Sugarcane**
*C.K.Karpaga Jothi*

சிறு ஆங்கில கதை எழுதுதல் போட்டியில் முதலிடம் பெற்ற கதை.

## கேளு நண்பா

ப்ரெண்டுங்கிறவன் டைரி மாதிரி இருக்கணும். நம்மைப் பத்தின முழுத் தகவல்களும் பரஸ்பரம் ஒளிவு மறைவில்லாம வைச்சிருக்கணும்.

நம்ம ஹிஸ்டரி (கடந்த காலம்)யை புரிஞ்சுகிட்டு, இருக்கிற ஜியோகிராஃபியை (இடம், பொருள், ஏவல்) அனுசரிச்சு சட்டம் ஏதும் பேசாம நம்மை கெமிகல் ரியாக்ஷனுக்கு உள்ளாக்காம, ப்ராக்டிகலா யோசிக்கிறவனே, உண்மையான நண்பன்.

P.முனியசாமி, கரும்பாலை, XII

## ஹி... ஹி... ஹா.. ஹா..

மகள் : அம்மா நாம் பிறக்கிறதுக்க முன்னாடி என்னை பார்த்திருக்கயா?
அம்மா : இல்லையே
மகள் : அப்புறம் எப்படி பிறந்ததும் நான் தான் உங்க பொண்ணுன்னு கண்டுபிடிச்சீங்க



ஆசிரியர் : பத்து பேர் சேர்ந்து இருபது நாள்ல கட்டின கட்டிடத்தை இருபது பேர் சேர்ந்து கட்டினா எவ்வளவு நாள் ஆகும்?
மாணவன்: ஏற்கனவே கட்டிட கட்டிடத்தை ஏன் சார் திரும்ப கட்டனும்?

"வைகை ஆத்துல மீன் பிடிக்கலாம்.
காவிரி ஆத்துல மீன் பிடிக்கலாம்.
ஐயர் ஆத்துல மீன் பிடிக்க முடியுமா?"

"வாழை தார் போடும்
அந்த தாரை வைத்து ரோடு போடமுடியுமா?"

மீனா : ஏண்டா, கலா ஒரு குட்டி குரங்கு இருக்கு அது ஒரு பனை மரத்துல நிக்குது ஒரு பக்கம் சிங்கம். ஒரு பக்கம் தண்ணீர் எந்த பக்கம் போனாலும் ஆபத்து அது எப்படி தப்பிக்கும்?
கலா : ம்ம்ம்ம்... தெரியலடா
மீனா : உன் வயசு எத்தனடா?
கலா : 10 வயது
மீனா : 10 வயது குரங்கு உனக்கே தெரியலை அதுக்கு எப்படிடா தெரியும்.

ஒருவர் : மாப்பிள்ளைக்கு விளையாட்டு புத்தி அதிகம்.
பெண்ணின் அப்பா : அப்ப வரதட்சணைக்கு பதிலாக ஒரு பேட்டும் பந்தும் வாங்கி கொடுத்தா போதுமே?

"மனிதனுக்கு எவ்வளவு தான் தலைசுற்றல் இருந்தாலும், அவனால் தன்னுடைய முதுகைப் பார்க்க முடியுமா?"

சிறு குழந்தைகள்

## விஞ்ஞானி சொன்ன விளக்கம்!

வெற்றிக்கான சூத்திரம் குறித்து விஞ்ஞானி ஐன்ஸ்டீன் மேடையில் பேசிக்கொண்டு இருந்தார்.

'ஏ' என்பது வெற்றியானால், ஏ = எக்ஸ்+ஒய் + இசட். 'எக்ஸ்' என்றால் உழைப்பு, 'ஒய்' என்றால் விளையாட்டு என்று அவர் விளக்கிக்கொண்டு இருந்தபோதே, கூட்டத்தில் இருந்த ஒருவர் குறுக்கிட்டு, "இசட் என்றால் என்ன?" என்று கேட்டார்.

''வாயை மூடிக்கொண்டு பொறுமையாக இருப்பது'' என்றார் ஐன்ஸ்டீன்.

C.T.அருண்குமார்

## எம்.பி., எம்.எல்.ஏ., ஆக எக்ஸாம் வேண்டும்



- மாணவரின் அரசியல் அறிவுக்கான கட்டுரை

அரசியல் என்பது சாக்கடை. நல்லவர்கள் அரசியலில் ஈடுபடமாட்டார்கள். அரசியலில் எல்லா அசிங்கங்களும் சகஜம் என்று முகம் சுளிப்பவர்கள் உண்டு. தேர்தல் வந்தால் ஓட்டு போடுவோம். ஆனால், அரசியலில் இருந்து விலகியே நிற்போம் என்று சொல்பவர்களும் உண்டு. அரசியல் என்பது சிறந்த தொழிலாகி விட்டது. அதுவும் மூலதனமே இல்லாத ஒரு தொழில் என நாளேடுகளில் விமர்சிக்கின்றனர். இதில் அரசியல் என்பது மக்களுக்கு சேவை செய்ய கிடைத்த ஒரு நல்ல வாய்ப்பு என்று கருதுவாரும் உண்டு. இது பிழைப்பு அல்ல மாறாக மக்களுக்கு அர்ப்பணிப்போடு செய்யும் உழைப்பு என கூறுவாரும் உண்டு. ராமன் ஆண்டால் என்ன ராவணன் ஆண்டால் என்ன என ஒதுங்குவாரும் உண்டு. நம் வாழ்க்கையில் அனைத்து இடங்களிலும் அரசியல் கலந்து உள்ளது. சிறுவர்கள் பீடி, சிகரெட் குடிக்கக் கூடாது அரசியலிலும் ஈடுபடக் கூடாது. இவ்விடம் அரசியல் பேசக்கூடாது என்று எழுதி உள்ள டீக்கடைகளிலும் உண்டு. நாம் என்ன நினைக்கிறோமென்றால் யாருமேஅரசியலுக்கு போகக்கூடாது. அது நம்மவேலை இல்லை. தேர்தல் வந்தால் மட்டும் வருஷம் முழுதும் அவன் என்ன கிழிச்சான் என தாருமாறாக பேசுவோம். அவன் பயங்கர பாலிடிக்ஸ் பண்றாம்பா. உங்க பாலிடிக்ஸ்லே என்ன மாட்டி விடாதீங்க. நாங்க ஒன்னும் பாலிடிக்ஸ் பண்ண வரல என பேசுகிறோம். அப்படி என்றால் அரசியல் என்பது வஞ்சகம், சதி, சூது கேடு என்ற அர்த்தத்தில் பேசுகிறோம். இன்னொரு பேச்சு இப்பெல்லாம் என்ன சார் அரசியல் நடக்குது. காமராஜ் காந்தி மாதிரியாக இருக்குது. அரசியல் இப்பெல்லாம் சரியே இல்ல சார். துட்டு அடிக்கிற கதைதான் நடக்குது சார் இங்க என கூறுகிறார்கள். என்ன ஆனாலும் காமராஜ் மாதிரி வருமா? என வெட்டி அரட்டை அடிக்கிறவர்களும் உண்டு. இன்னொரு புறம் லஞ்சம், ஊழல் கூடப் பரவாயில்லை. அடிதடி, வெட்டுக்குத்து, சொந்தக் கட்சிக்காரனையே வெட்டுறது என சர்வ சாதாரணம் மேலும் தலைவர், தலைவிகள் காலில் விழுந்து கும்பிடுகிற அசிங்கம் வேற. சீ—மானம், ரோசம், வெட்கம், சூடு, சுரணை உள்ளவன் அரசியலுக்கு போவானா?

இந்த வாதங்களில் பொய் ஒன்றும் இல்லைதான் ஆனால் இவையே முழு உண்மையும் இல்லை.

ஒரு முக்கியமான உண்மையை மறக்கிறோம். சாக்கடை என்றும் மாணங்கெட்டது என்று நாம் பேசுவது 5 வருடத்திற்கு ஒருமுறை வருகிற தேர்தலைத்தான். இந்த அரசியலை சாக்கடைகளாக வைத்திருப்பதன் மூலம் உழைப்பாளிகள், நல்லவர்கள் இதை விட்டு விலகி இருக்கும்படி செய்யப்படுகிறது. இது சாதாரண தற்செயலான நிகழ்வு என்றாலும் இது உண்மையில் திட்டமிட்ட சதியாகும்.

அரசியல் என்ற சொல் இரண்டு வார்த்தைகளை உள்ளடக்கியது. அரசு + இயல் - அரசு சம்பந்தப்பட்டதுதான் அரசியல். அரசு என்றால் ஆங்கிலத்தில் ஸ்டேட் என அர்த்தம். வேறு எதை அரசு என்கிறோம்?

கலெக்டர் ஆபிஸ், தாலுகா ஆபிஸ், பஞ்சாயத்து கோர்ட், சிறை, போஸ்ட் ஆபிஸ்,

ராணுவம், சட்டமன்றம், பாராளுமன்றம், அமைச்சர்கள், ஆளும்கட்சி எதிர்க்கட்சி, அரசு நிறுவனங்கள் அனைத்தும் அடங்கும். இந்த அரசைப் பற்றியதுதான். அரசியல், ஆனால் இதில் ஒரு பிரிவான சட்ட,ப பாராளுமன்றத்தில் 5 ஆண்டுக்கு ஒருமுறை யார் போய் உட்காருவதுதான் அரசியல் என குழம்பிக் கிடக்கின்றோம். பல நாடுகளில் சட்டமன்றம், பாராளுமன்றம் இல்லாமல் கூட அரசு இருக்கிறது. ஆட்சிகளில் பலவகை உண்டு. ஆனால் அரசு ஒன்றுதான்.

**ராணுவ ஆட்சி :**

ஒரு ராணுவ அதிகாரியே அதிபராக இருப்பார். அமைச்சரவை இருக்கலாம் (எ.கா.) பாகிஸ்தான், தென் அமெரிக்கா நாடுகளில் சில.

**முடியாட்சி :**

மன்னராட்சி முறை (எ.கா.) அரபு நாடுகள்

**சர்வாதிகார ஆட்சி:**

தனிநபர் சர்வ அதிகாரம் படைத்தவராக இருப்பார். அவர் இட்டதுதான் சட்டம்.
சென்ற நூற்றாண்டில் பல நாடுகளில் இருந்தது. (எ.கா.) மெக்ஸிகோ

**பாசிஸ்ட் ஆட்சி:**

நாட்டு மக்களை ஒரு போலி தேசிய உணர்வில் அமிழ்த்து வைத்து பிற இனங்களை ஒழிப்பது தனி அல்லது குழுக்கள் பணி செய்யும். (எ.கா.) ஹிட்லர், முசோலினி

இப்போது பி.ஜே.பி. தலைமையில் வளரும் அமைப்பு, குஜராத்தில் முஸ்லீம் மக்களை கொன்று குவித்திருக்கிறது. இது சக்தியான கட்சியாக ஆட்சிக்கு வந்தால் இது பாசிஸ்ட் கட்சியாகவே கருதப்படும்.

**காலனி ஆட்சி:**

எங்கோ இருக்கும் ஒரு நாடு வேறு எங்கோ இருக்கும் பிற நாடுகளை அடிமைப்படுத்தி ஆள்வது. (எ.கா.) பிரிட்டன் இந்தியாவை ஆண்டது.

**ஜனநாயக ஆட்சி :**

தேர்தல் மூலம் ஓட்டு போட்டு ஆட்சியை மக்கள் தேர்ந்தெடுப்பது (எ.கா) இந்தியா, அமெரிக்கா

இதைத்தான் அரசாங்கம் என்கிறோம். ஆனால் அரசு என்பது வேறு. அது எப்போதும் எல்லா நாடுகளிலும் ஒரே வேலையைத்தான் செய்கிறது. நிதி, நீதி, நிர்வாகம், காவல் மற்றும் பல ஆட்சிமுறைகள் என்னவாக இருந்தாலும் அரசு என்பது நீதி, நிர்வாகம், காவல்தான் இதுதான்.

ஒரு நாளைக்கு 20 மணி நேரம் கூட வேலை பார்த்தார்கள். ஆனால் நான்கு மணி நேரத்துக்கு மட்டுமே ஊதியம் வாங்கினர். பின்பு எட்டு மணி நேரம்தான் உழைக்க வேண்டும் என குரல் எழுப்பினர். இதன் உச்சநிலை தான் 1886-ஆம் ஆண்டு தொழிலாளர் போராட்டம், தொழிற்சங்கம் ஆகியவைகள்.

1947ல் இந்தியா சுதந்திரம் பெற்றபோது 4 கட்சிகள் தான். அது இந்திய தேசிய காங்கிரசு, இந்திய முஸ்லீம் லீக் வலது சாரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, சோஷலிஸ்ட் கட்சி - இடது சாரி ஆனால்

இன்று 600க்கும் மேற்பட்ட கட்சிகள் இருக்கின்றன. அதில் இடது சாரி நான்கு அல்லது 5 இப்படி நூற்றுக்கணக்கான கட்சிகள் இருப்பதால் தொழிலாளர்களுக்கும், பிற உழைப்பாளி மக்களுக்கும் எது உண்மையிலே நம் கட்சி என கண்டுபிடிக்கத் தெரியாமல் ஏமாந்து கொண்டிருக்கிறார்கள். அல்லது ஒரு கட்சியும் வேண்டாம், சாக்கடை என்று ஒதுங்கி நிற்கிறார்கள். வரலாற்றில் இரண்டு வகை உண்டு. ஒன்று எழுதப்பட்ட வரலாறு மற்றொன்று நடந்த வரலாறு. இந்த பாணியில் சோழர் காலத்தில் குடவோலை முறையில் கிராமசபைகள் தேர்ந்தெடுக்கப்பட்டது. இது பற்றி எல்லோர்க்கும் தெரியும். அதைப்பற்றி பேசுகிறார்கள். அக்காலத்திலேயே தமிழன் ஓட்டு போட்டு கிராமசபையை தேர்ந்தெடுத்திருந்தான். சோழர்களின் ஜனநாயக உணர்வு என பாராட்டுபவர்கள் உண்டு. ஆனால் உண்மைஎன்ன? யாரெல்லாம் கிராமசபைக்கு போட்டியிட முடியும் தெரியுமா?

உத்திரமேரூர் என்ற இடத்திலுள்ள சோழர் காலக் கல்வெட்டு கிராமசபைக்கு உறுப்பினராகும் தகுதி பற்றி கூறுகிறது. அதாவது,

கால்வேலி நிலத்துக்கு மேல் இறைநிலம் உடையவனாகவும், தன் சொந்த மனையிலேயே வீடு கட்டிக் கொண்டவனாகவும், முப்பதிலிருந்து அறுபது வயதிற்கு உட்பட்டவனாகவும் வேத சாஸ்திரத்தில் நிபுணராகவும் இருப்பவனே உறுப்பினராக முடியும்.

ஏழை உழைப்பாளி மக்களை புறந்தள்ளி விடுகிறது. வேத சாஸ்திரத்தை சூத்திரர் படிக்க முடியாது. ஆக இதில் பலர் உறுப்பினராகவே முடியாது. இவ்வாறு அக்காலத்திலேயே நடந்திருக்கிறது.

இப்போது இந்தியாவில் மாற்றி மாற்றி காங்கிரஸின் லீலைகளையும், பா.ஜ.க.வின் வெறியாட்டமும், தி.மு.க., அ.தி.மு.க.வின் பிலிம்களையும் பார்த்து மக்கள பொழுதை கழிக்கின்றனர். இதை கிழிக்கத்தான் இடது சாரி கட்சிகள் உள்ளே செல்கிறது. 596 வலது சாரிகளையும் தாண்டி இடது சாரி குரல் ஒலிக்க வேண்டுமானால் அவர்களின் சக்தி பல மடங்கு பெருக வேண்டும்.

ஜெர்மனி நாடு உலகுக்கு அளித்த மேதை கார்ல் மார்க்ஸ் 1848 கம்யூனிஸ்ட் அறிக்கை என்றொரு புத்தகத்தை அவரின் நண்பர் ஏங்கல்சுடன் சேர்ந்து வெளியிட்டார். அப்புத்தகம் அரசியலை பற்றி அதுவரை இருந்த கருத்து, எண்ணம், அர்த்தம் அத்தனையும் தலைகீழாகிவிட்டது. மக்கள் என பொதுவாக பேசுவது தவறு தொழிலாளி, விவசாயி ஆகிய பாட்டாளிகள் வேறு. பாட்டாளி உழைப்பால் சுகமாக வாழும் முதலாளி வர்க்கம் வேறு என்பதை புரிய வைத்தார்.

அன்று முதல் உலகில் இரண்டே இரண்டு அரசியல்தான் உண்டு என்பது தெளிவாகிறது. அவை, 1. இடது சாரி, 2. வலது சாரி.

நாட்டின் சொத்து அனைத்தும் பொது உடமையாக இருக்க வேண்டும். சமூகத்தின் கையில் இருக்க வேண்டும் என்று சொல்வது இடது சாரி, சோசலிஷம் என்றால் சமூக உடமைஎனப் பொருள். சொத்து அனைத்தும் முதலாளிகளிடமே இருக்க வேண்டும் என சொல்வது வலது சாரி.

அரசியல் என்றாலே சமூகத்தின் சொத்துக்கள் அதாவது பொருளாதாரம் யார்க் கையில் இருக்க வேண்டும் என்பதை முடிவு செய்யும் அதிகாரம்தான்.

பின் ஏன் இத்தனை கட்சிகள்? இப்படி அப்பாவியாக நாம் கேள்வி கேட்கலாம். முதலாளிகள் நம்மைப் போல் அல்லது வெளிப்படையாக முதலாளி கட்சி அல்லது தனியுடமைகட்சி என பெயர் வைத்தால் மக்கள் ஆதரவு கிடைக்குமா? ஆகவே பல விதமான பெயர்களில் கட்சிகள் வைத்து அரசியல் செய்கிறார்கள். இதை பார்த்த மார்க்ஸ் இவ்வளவு கட்சிகள் இருந்து என்ன? தொழிலாளிகளுக்கு பாடுபட ஒரு கட்சி கூட இல்லையே என வருந்தினார். அவரே முன் நின்று கம்யூனிஸ்ட் என்ற கட்சி தொடங்கினார். கம்யூனிஸ்ட் என்றால் பொதுவுடமைஎன அர்த்தம்.

இது உலகம் முழுவதும் பரவியது. இதைத் தொடர்ந்து முதலாளிகள் எவ்வாறு முதலாளிகள் ஆனார்கள் என்கிற கதையை கார்ல்மார்க்ஸ் புள்ளி விவரத்தோடு டாஸ்காஃபிடல் அதாவது மூலதனம் எழுதினார்.

இதைப் படித்த தொழிலாளர்கள் மூலதனம் என்பது எப்படி வந்தது? இலாபம் எப்படி? எனப் புரிந்து கொண்டனர்.

சினிமாக்களின் கதைகளும் கூட, கார் பங்களா வைத்திருக்கும் பணக்கார மகான்களின் கதைகளாகவே இருக்கிறது. சில பேர்தான் சீமான் மாதிரி ஆட்கள் நாட்டின் நிலைமையை எடுத்து காட்டுகிறார்கள்.

ஆக அரசியல் என்பது அரசியல் சம்பந்தப்பட்டது உண்மையான அரசியல் என்பது பொருளாதாரம் பார்க்கையில் இருக்க வேண்டும் என்பது பற்றியதுதான். அரசியல் இரண்டு தான் இடதுசாரி, வலது சாரி. வேறு அரசியலே கிடையாது.அரசியலே வேண்டாம் என தொழிலாளி சொல்லிவிட்டால் எல்லாத்தையும் முதலாளிகளையே பார்த்துக் கொள்ளலாம். முதலாளித்துவம் நாம் மேன்மேலும் அரசியலற்றவர்களாக மாறுவதை ஆவலுடன் எதிர்பார்க்கிறது. ஆக முதலாளி உத்தரவுப்படி அரசியலற்றவர்களாகி ஃபோன் போட்டு சன் மியூசிக்கில் பாட்டு கேட்பவர்களாகவும், கிரிக்கெட்டுக்காக வேட்டு போட்டு, வேலைக்கு லீவு போடுபவர்களாகவும், நம் பிள்ளைகளை எல்லையில் துப்பாக்கிகளுடன் வெயிலில் நிறுத்தி முதலாளி சொத்துக்களை பாதுக்காக்கிறவர்களாகவும், மனைவி படைத்த சாம்பாரில் உலகை மறப்பவர்களாகவும் வாழ்ந்து முடிந்து விடப் போகிறோமோ? எத்தனை காலம்தான் இப்படி வாழப் போகிறோம்?


முதலாளிகளின் ஆசையில் மண் விழ,அவர்களின் கனவுகள் அழிய, சகல சதிகளும் உடைந்து நொறுங்க உழைக்கும் மக்களும், மாணவ நண்பர்களும் பெண்களும் இணைந்து போராடி அரசியலில் இணைவோம். சாக்கடையை சந்தனமாக்க பாடுபடுவோம்.

IAS, IPS-க்கு ஒரு தேர்வு என தேர்வு எழுதுவது போல் அரசியலுக்கும், தேர்வு எழுதும் ஒரு சமூகம் உருவாக வேண்டும். அதற்காக நாம் உழைப்போம். நாட்டை நன்னிலை ஆக்குவோம்.



செ.விக்கி

Reference Books :



அரசியல் எனக்கு பிடிக்கும்
கம்யூனிசம் கற்க கசடற
கார்ல் மார்க்ஸ்
இந்திய பண்பாடு
அரசியல் அறிவியல்

## மதுரையில் ஓடிய முதல் ரெயில்

மதுரையில் ஓடிய முதல் ரெயில் எது தெரியுமா?

1875-ம் ஆண்டு செப்டம்பர் -1ந் தேதி மதுரை - திருச்சி இடையே ரெயில் ஓடியது. ரெயில் வரும்போது மக்கள் ஓடி ஒளிந்து கொண்டார்கள். இதுதான் மதுரைக்க வந்த முதல் ரெயில் ஆகும்.

மதுரை - தூத்துக்குடிக்கு இடையே 1876-ம் ஆண்டு ஜனவரி 1-ந்தேதி முதல் 2-வது ரெயில் ஓடியது.

காமாட்சி, தத்தனேரி.

## மதுரை மாநகராட்சி

1971ம் ஆண்டு தொழிலாளர் தினமான மேமாதம் 1ந் தேதி அன்று மதுரை மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டது. தமிழகத்தில் சென்னைக்கு அடுத்து இரண்டாவது மாநகராட்சியாக மதுரை அறிவிக்கப்பட்டது. மதுரை மாநகராட்சி. சென்னை ஆங்கிலேயே ஆட்சியின் போதே மாநகராட்சியாக மாற்றப்பட்டு விட்டது.

மதுரையை மாநகராட்சியாக அறிவித்த போது மதுரையின் மக்கள் தொகை 5 லட்சத்து 49 ஆயிரத்து 114 ஆக இருந்தது. மாநகராட்சியின் பரப்பளவு 22.9 சதுர கிலோ மீட்டராக இருந்தது. 1974 ஜனவரி 30-ந் தேதி மாநகராட்சியின் எல்லை விரிவுபடுத்தப்பட்டது. மதுரையை சுற்றி இருந்த கிராமங்கள் மதுரை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டது. விளாங்குடி, தத்தனேரி, அருள்தாஸ்புரம், செல்லூர், பீ.பீ.குளம், தல்லாகுளம், மானகிரி, வில்லாபுரம், மாடக்குளம், ஆரப்பாளையம், பொன்னேரி, கோச்சடை, உட்பட 13 கிராமப் பகுதிகள் மதுரை மாநகராட்சியுடன் சேர்க்கப்பட்டது. இவை எல்லாவற்றையும் சேர்த்து மாநகராட்சி எல்லை 5185 சதுர கிலோ மீட்டராக விரிவடைந்தது.

1975ம் ஆண்டு முதல் தல்லாகுளத்தில் பிரமாண்டமாக அழகிய வெள்ளை மாளிகையான அறிஞர் அண்ணா மாளிகை என்ற பெயர் கொண்ட கட்டிடத்தில் மாநகராட்சி அலுவலகம் இயங்கி வருகிறது.

1966ம் ஆண்டுக்கு முன்னர் வரை 65 வார்டுகள் மட்டுமேகொண்டு மாநகராட்சி செயல்பட்டது. அதற்கு பின் 72 வார்டுகளாக உயர்த்தப்பட்டு கவுன்சிலர்களாக உயர்த்தப்பட்டனர்.

மதுரை மாநகர் பரப்பளவு: 51.85 சதுர மீட்டர்

மக்கள் தொகை : 9,22,913

ஆண்கள் : 4,66,909

பெண்கள்: 4,56,004

ஆண், பெண் விகிதம்:

976 (1000 ஆண்களுக்கு)

படித்தவர்கள் : 6,85,865 (74.31)

ஆண்கள் : 3,80,321 (81.45)

பெண்கள் : 3,05,544 (67.00)

உழைப்பவர்கள்: 2,94,916 (31.95)

ஆண்கள் : 2,50,291 (53.60)

பெண்கள்: 43,625 (09.56)

வீடுகள் : 1,98,612

மக்கள் நெருக்கம் : 17,799 பேர்

(1 ச.கிலோ மீட்டருக்கு)

வாக்காளர்கள் : 7,08,554

ஆண்கள்: 3,66,937

பெண்கள்: 3,00,617

மொத்த மண்டலங்கள்: 4

(கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு)

மொத்த வார்டுகள் : 72

மொத்த கவுன்சிலர்கள் : 72

பெண் கவுன்சிலர்கள் : 24


தாழ்த்தப்பட்டோருக்கான

ஒதுக்கீடு வார்டுகள் : 4

G.மணிகண்டன், தத்தனேரி.



## படிப்பில் கவனம் செலுத்த, சரியாக சிந்திக்க



- வயிறு முட்ட சாப்பிடாம அளவோடு சாப்பிடுங்க
- காரம், புளிப்பு, எண்ணெய் பலகாரங்களை வேண்டாமுனு சொல்லிடுங்க.
- தெருவோர கடை பண்டங்களை பார்த்தா ஓடிடுங்க
- தினமும் அம்மாகிட்ட கீரை வேணுமுனு சொல்லுங்க.
- ஞாபகசக்தி வேணுமா வல்லாரை கீரை சாப்பிடுங்க
- நரம்புகள் நல்லா இருக்க கீரையோடு பாசிபயறை வேகவைத்து சாப்பிடுங்க
- இரவு உணவை சரியாக 8.30க்கு சாப்பிடுங்க
- இரவு நல்லா தூங்குங்க
- வாரம் ஒரு நாள் எண்ணெய் தேய்ச்சு குளிங்க
- சிம்பிளா ஃபோர் கவுண்டிங் எக்ஸர்ஸைஸ், ஆசனங்கள் செய்ங்க
- குளிர்ந்த நீர்ல குளிங்க.
- உங்க துணிகளை நீங்களே துவைங்க (அது கிட்டத்திட்ட ஒரு ஆசனம் செய்றமாதிரி)

பெரிய உடற்பயிற்சிகள் செய்தீங்கன்னா மனசு, மூளை ஆரோக்கியமா இருக்கும். நல்லா சிந்திக்க முடியும். அப்புறம் என்ன நாம்தான் வெற்றியாளர்கள்.

## வீட்டில் செய்யும் எளிமையான உடற்பயிற்சி முறைகள் :

- தினமும் அதிகாலை 5 மணிக்கு எழுந்திருங்கள். காலைக் கடன்களை முடித்தவுடன் டீ, காபிக்கு பதிலாக ஒரு லிட்டர் தண்ணீர் குடியுங்கள்.
  அதன் பின் 5.15 மணிக்கு உடற்பயிற்சி செய்ய தயாராகுங்கள்.



- காலை 5.15 மணியில் இருந்து 5.35 வரை சிறிது தூரம் வாக்கிங் போங்கள். ஒரு கிலோ மீட்டர் தூரம் சென்று வந்தாலே போதும். வாக்கிங் செல்லும் போது கைகளை நன்றாக வீசி வேக வேகமாக நடக்க வேண்டும்.
  வாக்கிங் முடிந்ததும் சிறிது நேரம் வீட்டிலே உலாவுங்கள்.
- காலை 5.45 மணியில் இருந்து 6 மணி வரை அமைதியான இடத்தில் அமர்ந்து யோகா செய்யுங்கள். இந்தப் பயிற்சிகளை சூரிய உதயத்தின்போது செய்தால் உடம்புக்கு மிகவும் நல்லது. இது தவிர பள்ளியில் சொல்லிக் கொடுக்கப்பட்ட ஆசனங்களைக் காலையில் செய்யுங்கள். மாலையில் ஜம்பிங், ஸ்கிப்பிங், ரன்னிங் போன்ற உடற்பயிற்சிகளை 30 நிமிடம் செய்யலாம்.

எம்.எஸ்.தங்கலெட்சுமி


## அடைமொழியால் அழைக்கப்படும் சான்றோர்கள்

| | | |
|---|---|---|
| கல்வியில் பெரியவர் | - | கம்பர் |
| சூடிக் கொடுத்த சுடர்க்கொடி | - | ஆண்டாள் |
| நவீனக் கம்பர் | - | மீனாட்சி சுந்தரம் பிள்ளை |
| தேசியக் கவிஞர் | - | பாரதியார் |
| காந்தியக் கவிஞர் | - | ராமலிங்கம்பிள்ளை |
| புரட்சிக் கவிஞர் | - | பாவேந்தர் |
| உவமைக் கவிஞர் | - | சுரதா |
| மக்கள் கவிஞர் | - | பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் |
| குழந்தைக் கவிஞர் | - | அழ.வள்ளியப்பா |
| சொல்லின் செல்வர் | - | ரா.பி.சேதுப்பிள்ளை |
| தமிழ்த் தென்றல் | - | திரு.வி.கல்யாணசுந்தரனார் |
| முத்தமிழ்க் காவலர் | - | கி.ஆ.பெ.விசுவநாதன் |
| சிலம்புச் செல்வர் | - | ம.பொ.சிவஞானம் |
| கவிமணி | - | தேசிய விநாயகம்பிள்ளை |
| தமிழ்ச்சிறுகதையின் தந்தை | - | வ.வே.சு.ஐயர் |
| சிறுகதை மன்னர் | - | புதுமைப்பித்தன் |
| தொண்டர் சீர்பரவுவார் | - | சேக்கிழார் |
| அப்பரடிகள் | - | திருநாவுக்கரசர் |
| காவடி சிந்துக்குத் தந்தை | - | அண்ணாமலை ரெட்டியார் |
| மகாவித்வான் | - | மீனாட்சி சுந்தரம்பிள்ளை |
| நாவலர் | - | சோமசுந்தர பாரதியார் |
| மொழி ஞாயிறு | - | தேவ நேயப்பாவணர் |

N.ஹானஸ்ட் ராஜ், தத்தனேரி, XII

---

## முகத்துக்கு மூடி போட்டுப் பாரு...



- ★ உங்கள் முகத்தை விட சற்று பெரிதான அட்டை ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள். அது உங்கள் முக வடிவத்துக்குப் பொருந்துவதாக இருக்க வேண்டும்.
- ★ கண்களுக்கான இடத்தில் சற்று பெரிய துளைகளைப் போட்டுக் கொள்ளுங்கள்.
- ★ முகமூடிக்கு வர்ணம் தீட்டுங்கள்.
- ★ அட்டை ஒன்றை முக்கோண வடிவத்தில் கத்தரித்து அதை லேசாக மடித்து முகமூடிக்கு மூக்கை உருவாக்குங்கள்.
- ★ வாய்ப்பகுதியை சோகமாகவோ, சந்தோஷமாகவோ வரைவது உங்கள் விருப்பம்.
- ★ தடிமனான காகிதத்தை எடுத்து 1 சென்டி மீட்டர் அகலம், 5 செ.மீ. உயரத்துக்கு பல பட்டைகளை வெட்டிக் கொள்ளுங்கள்.
- ★ இதை வர்ணம் தீட்டி முகமூடியின் மேல் விளிம்பின் முன்பகுதியிலும், பின்பகுதியிலும் மாற்றி மாற்றி ஒட்டுங்கள்.
- ★ முகமூடியின் இரு முனைகளிலும் சிறு துளைகள் இட்டு எலாஸ்டிக் கயிறு ஒன்றை மாட்டுங்கள். முகமூடி தயார்!

S.முத்துகுமார்
சிறு இயக்குநர்

## சொந்த காலில் நில்லுங்கள்

அறுபது வயது ஆலமரம்
விழுதுகளை விட்டு உயர்ந்து வளர்ந்திருந்தது
பக்கவாட்டிலும் பரந்து விரிந்த வளர்ச்சி
அதன் அடியில்...
பெரிய பெரிய மரமாக வேண்டிய
சின்னச் சின்னச் செடிகள்



ஆலமரத்தின் நிழலை வாழ்த்தின:
எவ்வளவு பெரிய மரம்...!
இந்த நல்ல மரமின்றி எங்களுக்கு நல்வாழ்வு இல்லை
இம்மரமே எங்கள் முன் மாதிரி
எவ்வளவு சுகமான வாழ்வு இது...!
பெரியவர் ஒருவர் வந்தார்
கொழு கொழுவென வளர்ந்திருந்த
சின்னச் சின்னச் செடி
-மரங்களைப் பார்த்தார்
மனமிரங்கினார்.

தள தளவென்ற இந்த வளர்ச்சி ஆரோக்கியமானதல்ல. பிடுங்கி வேறொரு இடத்தில் நட்டு வளர்க்க முயன்றார்.

அலறின அறிவு கெட்ட சின்ன மரங்கள்
ஐயோ...! எங்களைப் பிடுங்காதீர்கள்
இந்த ஆலமர நிழலின்றி வேறு வாழ்வை எங்களால்
யோசித்துக் கூடப் பார்க்க முடியாது.
வேறு இடத்தில் இப்படி கொழு கொழு...
என வளர முடியுமா?
நாங்கள் நிழலுக்கு எங்குப் போவோம்?
பெரியவர் சொன்னார்:

இந்த ஆலமரம் இல்லையென்றால் உங்களுக்கு நிழல் கிடைக்காமல் போகலாம். ஆனால் சூரிய ஒளி கிடைக்குமே... சூரிய ஒளி இல்லாமல் தான் நீங்கள் இப்படி கொழு கொழு வென்று இருக்கிறீர்கள் இப்படியே போனால் உங்களால் கனி தர முடியாது.

தொடர்ந்தார்:
சின்னச் சின்ன செடி மரங்களே!
நிழல் தரவேண்டிய நீங்களே
நிழலுக்கு அலையலாமா?

புரிந்து கொண்ட செடி மரங்கள் அறிவுரை கேட்டு நின்றன.

நாங்களும் தனியொரு பெரிய மரமாய் உருவாக என்ன செய்ய வேண்டும்?

கடைசியாய்ச் சொன்னார்:
சுயசார்பு கொள்ளுங்கள்
சொந்தக் காலிலே நில்லுங்கள்.
பரந்து வளர்ந்த ஆல மரத்தடியில்
எந்த மரமும் செழித்து வளர முடியாது.
அப்படி ஒரு வேளை வளர்ந்தால் -
அது ஒட்டுண்ணியும் சாருண்ணியுமாகத் தான் இருக்கும்.

நன்றி : விழிப்புணர்வு குட்டிக்கதைகள்

---

## இரையாகா ஊர்க்குருவி



சின்ன சின்ன குருவி
சிங்காரக் குருவி
வண்ண வண்ண குருவி
வய்யாரக் குருவி!!
உயர உயர பறக்கும்
ஒய்யாரக் குருவி
மின்ன மின்ன பறக்கும்
மிடுக்கான குருவி!!
கண்ணிமைக்கும் நேரத்தில் பறக்கும்
கரிசிக் குருவி
மின்னல் வேகத்தில் பறக்கும்
மின்மினிக் குருவி!!
வானத்தின் எல்லை அறியா
விளையாட்டுக் குருவி
வானத்தை வீம்பாக முறிக்கும்
வளமான குருவி!!
உயரப் பறந்தாலும்
வட்டமிடும் கழுகுக்கு
இரையாகாத
ஊர்க் குருவி!!
கூட்டமாக வாழும்
பலவண்ணக் குருவி
கிடைத்ததை பகிர்ந்து கொள்ளும்
சோசலிசக் குருவி!!

டாக்டர். உ.அக்பர்அலி

# குருதியில் மலர்ந்த



மார்ச் மாதம் 8ஆம் தேதி சர்வதேச உழைக்கும் தினமாக கொண்டாடப்படுகிறது. இத்தினம் சர்வதேச அரங்கில் அழகிப் போட்டி, சமையல் போட்டி, கோலப்போட்டி என பெண்களின் சிந்தனைகள் திட்டமிட்டு, திசைதிருப்பப்பட்டு, பெண்ணடிமை சிந்தனைகள் வலுப்படுத்தப்படுகின்றது. போராட்ட குணம் மழுங்கடிக்கப்படுகின்றது. ஆயிரமாயிரம் பெண்கள் தமது அடிப்படை உரிமைகளை பெற இரத்தம் சிந்திப் போராடிப்பெற்ற நாள் மார்ச் 8. இதன் உண்மை வரலாறு தெரிந்து கொண்டாடுவதும், அதன் அர்த்தம் விளங்கி செயல்படுவதும்தான் கற்பவருக்கு அழகு. மாணவ நெஞ்சங்களே வாருங்கள் பெண்கள் தின வரலாறு அறிவோம்.

தொடக்க கால வரலாற்றில் அதாவது பழைய பொது உடமைசமூகத்தில் பெண்ணடிமைத்தனம் நிலவவில்லை. அந்த தாய்வழிச் சமூக அமைப்பில், பெண்கள் அனைத்து உரிமைகளையும் பெற்றவர்களாய் இருந்தனர். காட்டு மிராண்டி நிலையில் இருந்த மனிதன் படிப்படியாக வளர்ந்து உழவுத்தொழிலில் ஈடுபட்டு உணவு தானிய உற்பத்தியில் ஈடுபடத் தொடங்கினான். விவசாய உற்பத்தியைத் தொடர்ந்து கைத்தொழில் உற்பத்தியில் ஈடுபடத் தொடங்கினான். இதனால் ஏற்பட்ட உற்பத்தி உறவிலிருந்து வேலைப்பிரிவினை, வர்க்க முரண்பாடுகளுக்கு வித்திட்டது. ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையில் வேலைப் பிரிவினை தோன்றிய இக்கட்டத்தில் பெண்ணினத்தின் வீழ்ச்சிக்கான ஆரம்ப வரிகள் வரலாற்றில் எழுதப்பட்டன. இதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட உற்பத்தி கருவிகளின் வளர்ச்சியும், அதனால் ஏற்பட்ட உபரி உற்பத்தியும், தனி சொத்துடமைகளுக்கு வழி கோலியது. இந்த தனி சொத்துடமையை அடிப்படையாக கொண்டு நிலவுடமைச் சமூக அமைப்பு தோற்றமெடுத்தது. இச்சமூக அமைப்பு நிலத்தோடு கட்டுண்ட சமூக அமைப்பாகும்.

இவ்வமைப்பில் நிலம்தான் உற்பத்தி சாதனமாகும். உற்பத்தி கருவிகள் அதிகம் வளர்ச்சியுறாத இக்காலத்தில் மனித உழைப்பு அதிகமாக தேவைப்பட்டது.

தனிச் சொத்துடமையும், குடும்ப அமைப்பும் உறுதிபடுத்தப்பட்ட இச்சமூக அமைப்பில் குடும்பத்திற்கு தேவையான வாரிசுகளை பெற்றுத் தருவதும், பேணி வளர்ப்பதுமே பெண்களின் கடமையாக்கப்பட்டது. தனக்கு பின்னால் தனது சொத்து இரத்த உறவுள்ள வாரிசுக்கே சென்றடைய வேண்டும். இந்த காரணத்திற்காக பெண்களிடம் கறாரான கற்புக் கோரப்பட்டது. தாய்வழி சமூக அமைப்பு தகர்க்கப்பட்டு தந்தை வழி சமூக அமைப்பு நிலைநிறுத்தப்பட்டு, ஆணாதிக்கம் வரலாற்றில் கோலோச்சத் தொடங்கியது.

நிலபிரபுவத்தின் இடிபாடுகளிலிருந்து முதலாளிய சமூகம் தோன்றியது. சுயதேவைக்கான உற்பத்தியிலிருந்து இலாபத்திற்கான உற்பத்தி முறையாக மாறியது. முதலாளித்துவம் சரக்கு உற்பத்தியை பெரிதாக்கியதால் அதற்கு பரவலான மனித உழைப்பு தேவைப்பட்டது. இந்த நிர்பந்தத்தால்,

மனித உழைப்பின் மூலம் உபரியை உறிஞ்சி கொழுப்பதே நோக்கமாக கொண்ட முதலாளியம் பெண்களையும் சமூக

உற்பத்தியில் ஈடுபடுத்த தொடங்கியது. பெண்களின் மலிவான அடிமை உழைப்பை அதிகரிக்கத் தொடங்கியது. இவ்வாறு தொழிற்சாலைகளில் பெண் தொழிலாளர்கள் உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டபோது பெண்களின் வேலை நிலைமைகள் மோசமாக இருந்தன. தினமும் 11 மணி, 14 மணி நேரங்கள் கசக்கி பிழியப்பட்டனர். போதிய உணவோ, சுகாதார வசதியோ கிடையாது. நோய் எதிர்ப்பு சக்தியின்றி இரத்தசோகையில் பாதிக்கப்பட்டு மரணத்தின் விளிம்பிற்கு துரத்தப்பட்டனர். ஆரம்பத்தில் ஆண் தொழிலாளர்களுக்கு மட்டுமே தொழிற்சங்கங்கள் இருந்தன. அதேபோல ஆண்களுக்கு மட்டுமே வாக்குரிமையும் இருந்தது. பெண் தொழிலாளர்கள், தங்களின் பணிநிலை மேம்பாட்டிற்காகவும், ஆண்களுக்கு இணையான கூலியை கோரியும் பிற ஜனநாயக உரிமைகளுக்காகவும்,. தொழிற்சங்கங்களை அமைத்துப் போராட்டப் பாதையில் அணிதிரண்டு நடைபயிலத் தொடங்கினர். முதலாளித்துவமும், அதன் உச்ச கட்ட வளர்ச்சியாக உருவெடுத்த ஏகாதிபத்தியமும் தனிச் சொத்துடைமையும் குடும்ப அமைப்பையும் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு கொள்ளை இலாப வெறியுடன் ஆட்டம் போட்டுக் கொண்டிருந்த காலத்தில் வெடித்தெழுந்த மிகப்பெரிய பெண்கள் இயக்கத்தின் மகத்தான தலைவர்தான் கிளாராஜெட்கின். உலகில் மகளிர்தினம் பிரகடனப்படுத்தப்டுவதற்கு இவர்தான் காரணம்.



கிளாரஜெட்கின் ஜெர்மனியில் ஏழைக் குடும்பத்தில் தோன்றி சர்வதேசப் பொதுவுடமை நமான ரீசிஸ்டாக்கில் இயக்கத்தின் தலைவர்களில் ஒருவராக ஏற்றம் பெற்றவர். பன்மொழிப் புலமையும், ஆழ்ந்த அரசியல் ஞானமும் உடையவர். பின்னாளில் தனது வாழ்க்கை துணைவராக ஏற்றுக்கொண்ட, புலம் பெயர்ந்த ரஷ்ய நாட்டைச் சேர்ந்த ஓசிப் ஜெட்கினிடமிருந்து மார்க்சியத்தையும் விஞ்ஞான சோசலிசத்தையும் கற்றுணர்ந்து மார்க்சிய வாதியாக மலர்ந்தவர். பெண் தொழிலாளர்களை அமைப்பு ரீதியாக திரட்டி, வர்க்க உணர்வூட்டி வர்க்கப் போராட்டத்தினை ஈட்டி முறையாக கூர் தீட்டியவர். பாரிஸில் இருந்த போது, மாமேதை மார்க்ஸ் மகளான கிளாராலாய்ப்புடன் இணைந்து பெண் தொழிலாளர்களை புரட்சியாளர்களாக மாற்ற பணியாற்றியவர். இரஷ்யாவிற்கு சென்று மாமேதை லெனினை சந்திக்கும் வாய்ப்பை பெற்று அவரது அறிவு வெளிச்சத்தில் தனது தத்துவ பார்வையை ஆழப்படுத்திக் கொண்டவர். வாக்குரிமை உட்பட்ட அனைத்து உரிமைகளுக்கும் இடிமுழக்கமென குரல் கொடுத்த பெண்ணுரிமைபோராளி - ஜெர்மனியன் பாராளுமன்றமான ரீசிஸ்டாக்கில் உறுப்பினராய் இருந்த போதிலும் பாராளுமன்றத்தில் எல்லைகளை சுட்டிக்காட்டி அதற்கு வெளியே இருந்த புரட்சிகர சக்திகளை அணிதிரட்டுவதன் அவசியத்திற்கு அதிக அழுத்தம் கொடுத்தவர். உலக யுத்தத்தின் போது ஹிட்லிரின் பாசிசம் வெறியாட்டம் நடத்தியபோது ராணுவத்திற்கும், ஏகாதிபத்தியத்திற்கும் எதிரான எரியூட்டிகளை வீசி சிறைப்பட்டு இன்னலுக்கு ஆட்பட்டவர்.

ஜெர்மனியின் பொது உடமைகட்சியை உருவாக்கிய மூலவர்களில் ஒருவர். 25 ஆண்டுகள் சமத்துவம் என்ற ஏட்டின் ஆசிரியையாக இருந்து பெண்

விடுதலைக்கு குரல் கொடுத்த போர் முரசு கிளாராவின் வாழ்வு ஓர் அனுபவ பெட்டகம்.

1910ம் ஆண்டு மார்ச் 8ம் நாளென்று மான்ஹெட்டன் நகரில் அமெரிக்க பெண் தொழிலாளர்கள் ஆயிர கணக்கில் ஆர்த்தெழுந்து வாக்குரிமைகோரியும் தொழிலாளர்களின் உரிமைகளை வற்புறுத்தியும் போர் குணமுள்ள ஒரு ஆர்பாட்டத்தை நடத்தினர். உலகம் முழுவதிலும் உள்ள உழைக்கும் வர்க்கம் பெண்களை ஈர்த்த இந்த நாளில்தான் மகளிர்தினம் கருக்கொண்டது. சர்வதேச பொதுவுடமை இயக்கத்தின் மாவீர தலைவரும் ஆணாதிக்கத்தை தகர்க்க அயராது போராடிய, வீராங்கனையுமான கிளாரா ஜெட்கின், கோபன்கெனில் நடைபெற்ற சர்வதேச சோசலிசப் பெண்கள் அமைப்பின் சார்பில் நடத்தப்பட்ட மாநாட்டில் மார்ச்-8 உலக மகளிர் தினமாக அனுசரிப்பதற்கு ஒரு தீர்மானத்தை முன்மொழிய அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அன்று முதல் இத்தினத்தை உலகெங்கிலுமுள்ள உழைக்கும் வர்க்கப் பெண்களும் பெண்ணுரிமைவாதிகளும் மகளிர் தினமாக கொண்டாடி வருகின்றனர். ஆம், உழைக்கும் வர்க்கப் பெண்கள் நடத்திய பெண்ணுரிமை போராட்டத்தில் பூத்த புரட்சி தினமே மகளிர் தினம்.

பசி, பட்டினி, ஓய்வின்மைஆகிய கொடுமைகளை எதிர்கொண்டு 8 மணி நேர வேலை, வாக்குரிமை, கூலி உயர்வு, நிரந்தர வேலை ஆகியவற்றிற்காக விலை மதிப்புமிக்க தங்களது உயிரைப் பணயமாக வைத்து போராடிய ஆயிரக்கணக்கான பெண்களின் போர் குணத்தையும், கொள்கைகளையும் நாடு முழுக்க பரப்ப வேண்டிய நாள் மார்ச் 8 சமூக விடுதலைக்கான அவர்களின் தியாகத்தையும் உறுதியையும் உயர்த்தி பிடிக்கவேண்டிய நாள் மார்ச்8.

மார்ச் 8-ன் உண்மையான நோக்கத்தை அதன் வாரிசுகளான உழைக்கும் வர்க்க பெண்கள் உணர்ந்து விழித்தெழ வேண்டிய நாள் மார்ச்-8. தந்தை வழி ஆதிக்கத்தை இல்லாது ஒழிக்க, ஆண்டாண்டுகளாக நிலவி வரும் பெண்ணடிமைத் தனத்தை தீயிட்டு கொளுத்த இதற்கு அடிப்படையான சமூக பொருளியல் காரணங்களை அடித்து நொறுக்க, போர்க்குரல் எழுப்ப வேண்டிய புரட்சித் திருநாள் மகளிர்தினம். மார்ச்-8 சர்வதேச பெண்கள் தினவிழாவாக சுரண்டலுக்குள்ளாகும் மக்களின் விழாவாக கொண்டாடப்படும்



விடுமுறை நாள் பெண்களின் போராட்டத்தின் விளைவாகப் பெற்ற விடுமுறை நாள். பெண்களின் போராட்டத்தை திருவிழாவாக நடத்தும் ஒரு குறிப்பான நாள். ஒரு குறிப்பான நாளுக்காக நியூயார்க் லோவர் ஈஸ்ட் திசையிலிருந்து குடிபெயர்ந்து வந்த ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் தொழிலாளர்கள் கொடுத்த ஊக்கத்திலிருந்து பிறந்த நாள் மார்ச்8.

இரத்தம் சிந்தி போராடி சாதித்த 8 மணி நேர வேலையை இன்று சுரண்டும் வர்க்கம் மீண்டும் தனது இலாப வெறிக்கு இரையாக்குகிறது. ஏற்கனவே, பெண்கள், சமூகத்தில் வரதட்சணை கொடுமை, பெண் சிசுக்கொலை, பாலியல் வன்முறை, பாலியல் சுற்றுலா போன்ற ஆணாதிக்க சமூக ஒடுக்கு முறைகளை எதிர் கொள்கின்றனர். ஆணாதிக்க

கொள்கின்றனர். ஆணாதிக்க ஒடுக்குமுறைகளை மற்றும் வறுமைப் பிரச்சனைகளை நீக்கி தங்களை மீட்டுக்கொள்ள பெண்கள் சமூக உற்பத்தியில் மேலும் பங்கேற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றனர். பெண்கள் சந்திக்கும் இந்த நெருக்கடியைத் தனக்குச் சாதகமாக்கி முதலாளியம் அவர்களின் உழைப்பை மலிவாகவும், எளிதாகவும் சுரண்டி வருகிறது. உலகமயமாதலின் விளைவாக சந்தையில் பெண்கள் ஒரு வியாபாரப் பண்டமாக்கப்பட்டு சமூக அரசியல் பொருளாதார பண்பாட்டு தளங்களில் அவளின் வாழ்க்கை கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. மேலும் தாராள மயமாதல், தனியார் மயமாதல், தனியார் மயமாதலின் காரணமாக விவசாயம் நசுக்கப்பட்டு, ஆயிரக்கணக்கான பெண் கூலி விவசாயிகள், தொழிலாளர்களாக மாற்றப்பட்டு வருகின்றனர். இந்த சூழலில் மைய அரசினால் திட்டமிட்டு கொண்டு வரப்பட்டுள்ள செயலாட்சி துறையின் ஆணை கொண்டு ஆடை, நிறுவனங்களில் வேலை செய்யும் பெண் தொழிலாளர்களின் வேலை நேரம் 10 மணி நேரமாக நீட்டிக்கப்படுகிறது. மேலும் இரவு நேரப் பணியை அமலாக்கவும் வழி வகை செய்கிறது. மேலும் நவீன தொழில் மயமாதலின் விளைவாக வேலையில்லை என்ற நிலை பெருகி வேலைக்கு வரும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மைய அரசால் கொண்டு வரப்பட்டுள்ள சிறப்பு பொருளாதார மண்டலங்கள், பெண்களை சுரண்டும் ஒரு தனிச்சிறப்பு சுரண்டல் மண்டலங்களாகவே திகழ்கின்றன. இம்மண்டலங்களில்



திகழ்கின்றன. இம்மண்டலங்களில் உள்நாட்டு சட்டப் பாதுகாப்புகள் ஏதும் அமலில் இராது. பணி நேர காலம் நீட்டிக்கப்படலாம். கூலி உத்திரவாதத்திற்கான பணி நிரந்தரத்திற்கான உத்திரவாதம் ஏதும் அளிக்கப்பட்டது.

இன்று 33% இட ஒதுக்கீடு, வரதட்சணை எதிர்ப்பு பெண் சிசுக்கொலை, குடும்ப வன்முறை பாலியல் வகைப்பட்ட ஒடுக்கு முறை, பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் போன்றவற்றை எதிர்த்துப் பெண்ணுரிமைபோராளிகள் போராடி வருகின்றனர். இத்தகைய பெண்ணுரிமைக்கான போராட்டங்களோடு சுரண்டலற்ற சோஷியலிச சமுதாயத்தைப் பெறுவதற்கான மக்கள் திரள் இயக்கங்களிலும் புரட்சிகர போராட்டங்களிலும் பெண்கள் அணி திரடப்பட்ட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

முதலாளிகள் தொழிலாளிகள், நிலப்பிரபுக்கள், விவசாயிகள் போன்றவர்களுக்கு இடையே உள்ள எதிர்மறை அம்சங்களில் முதலாளித்துவத்தையும் நிலப் பிரபுத்துவத்தையும் வீழ்த்துவதன் மூலம் தொழிலாளர்களும், விவசாயிகளும் தேசமும் விடுதலை பெறுகிறது. ஆனால் ஆண்-பெண் ஆகியவர்களுக்கிடையேயான வேறுபாடுகளில் ஆண்களை வீழ்த்துவதன் மூலம் பெண் விடுதலை பெற முடியாது. ஆண், பெண் சமத்துவத்தின் அடிப்படையில் மானுட உறவை வளர்த்தெடுப்பதின் மூலமே பெண் விடுதலை சாத்தியமாகும்.

பயன்பட்ட நூல் : கிளாராவின் நினைவில் - கோவை ஈஸ்வரனின்: முன்னுரை
வெளியீடு: ரீனா

A.S. கார்த்திக்பாரதி
C.T.பிரேம்குமார்.

# பாராட்டுகின்றோம்...

M.பிரகாஷ் B.Com.,

S/o.முருகன் -மல்லிகா (வளர்ப்பு - தனம் ஆச்சி) K.K.நகர் மெயின் ரோடு, கரும்பாலை.



வக்பு வாரிய கல்லூரி மாணவர், நாம் அறிந்தவரை சமீப காலங்களில் மத்திய அரசு பணிகளில் கரும்பாலையைச் சேர்ந்த வெகுசிலரில் ஒருவர். சட்ட நுழைவு தேர்வில் பொதுபிரிவில் தேர்ச்சி பெற்று காலசூழலால் B.L. படிப்பை இடையில் விட்டவர். தொடர்ந்து அரசு தேர்வு எழுவதற்காக ஏழை மாணவர்களுக்கு பயிற்சி அளித்தவர். தீவிர புத்தக வாசிப்பாளர் சமூக செயற்பாட்டாளர். மையம் வீதி நாடகக்குழுவின் பிரதான நடிகர், இயக்குநர். கலை பயணங்களால் தமிழக முழுவதும் வலம் வந்தவர். சீடு-ன் ஓராண்டு காலம் தொண்டராக பணி செய்தவர். தற்போது மத்திய அரசு ஊழியராக நிறைவாக பணி செய்து வருகிறார். இன்னும் பிரகாஷ் இமயம் தொட Seed Trust வாழ்த்துகின்றது.

S.ஷமிலா பேகம் B.Sc.,

D/o.S.சிக்கந்தர் - S.சக்கரையம்மாள் (7/84, பள்ளிவாசல் தெரு, சம்பக்குடி,மதுரை)



வறுமையிலும் வளமையான குணங்கள் கொண்டவர் ஷமீலா பேகம். Help to help, best study, chain help என்பவை Seed விதிகளாகும். எல்லோரும் கடைபிடிக்கவே விதிகள் வகுக்கிறோம். விதிகள் விதிவசத்தால் வெவ்வேறு சூழல்களால் பயன்பெறும் மாணவர்களால் கைவிடப்படுகின்றன. நாம் ஷமிலா பேகத்திடம் முழுக்கக் காண்பது, தொண்டுள்ளம். நான்கு ஆண்டுகள் Seed பயனாளியாக இருந்த தான், Seed இடம் படிக்க உதவி பெற்ற தான், பிறருக்கு கற்பிக்க, பணம் பெறுவது முறையன்று என்று சொல்லி தொடர்ந்து நான்காண்டுகள் எவ்வித சலிப்பும் இன்றி வறுமையிலும் அயராது சம்பகுடி கல்வி முன்னேற்றத்துக்கு உதவி வருகிறார். 8 ஆண்டுகால சீடு உறுப்பினர் (நாகமலை V.N.கல்லூரியில் B.Sc., வேதியியல் பட்டம் பெற்றவர்) காவலர் தேர்வில் வெற்றிபெற உறுதி பூண்டுள்ளார். அதனால் நாம் சூட்டுகிறோம் புகழின் மகுடத்தை ஷமிலா பேகத்திற்கு. வாழ்க ! வளர்க!!

K.கிருஷ்ணவேணி B.Sc., (D/o.கோணையன் (லேட்) - லெட்சுமி)



வடமலையான் பார்மசி கல்லூரியில் படித்து வருகிறார். தன்னம்பிக்கை, விடாமுயற்சி, பணிவு, தெளிந்த நல்பெண்மை, உழைப்பு, கற்பதில் ஆர்வம் இவை அனைத்தின் கலவைதான் கிருஷ்ணவேணி. பார்வையற்ற தம்பதிகளின் மகளான வேணி, விவரம் தெரிந்த நாள் முதல் உழைப்பு...! உழைப்பு...! தோற்றத்தில் எளிமையான வேணிக்கு கல்வியை தொடர்வதில் ஆண்டுக்கு ஒரு முறை ஆறு மாதத்திற்கு ஒரு முறை என பிரச்சனைகள் புதிது புதிதாய் முளைக்கும். X, XII, B.Sc., (அதிலும் Science) என வெற்றிகரமாய் படிப்பை முடித்த வேணியின் புகழை "THE HINDU" பதிவு செய்திருக்கிறது. நம் புதுயுகமும் வேணிக்கு புகழ்மகுடம் சூட்டுகிறது. நமக்கு தெரிந்த வரை லேடி டோக் கல்லூரியில் படித்த முதல் கரும்பாலை பெண் வேணி என அறிகின்றோம்.

SEED மாணவிகளில் முதன்முறையாக LDC-ல் விலங்கியல் படிக்கச் சென்றவரும் இவரே. கரும்பாலையிலிருந்து முதன் முறையாக LDC சென்றவரும் இவரே என நாம் அறிகிறோம். வாழ்த்துக்கள் வேணி. வாழ்க! வளமைகள் பெறுக.

A.S.கார்த்திக் பாரதி, C.T.அருண்குமார்

# சீடு டிரஸ்ட் – மூன்று மாத நடவடிக்கைகள்

ஜனவரி 01: புத்தாண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு சீடு – இல் கூட்டு வழிபாட்டையும் பாட்டு வகுப்பையும் திருமிகு. கார்த்திக் பாரதி தலைமையேற்று நடத்தினார்.

ஜனவரி 05: சிறிய அறையில் நடைபெற்று வந்த சீடு அறக்கட்டளை வாண்டுகள் அரங்கம் அதே போன்று பிறிதொரு அறையோடு விரிவாக்கம் ஆனது.

ஜனவரி 07: சீடு குழந்தைகள் உரிமைகள் இயக்கத் தலைவர் சுரேஷ்ராஜன் தேர்வு

ஜனவரி 10: நவம்பர் 1ல் செயல்படத் துவங்கிய சீடு அறக்கட்டளையின் வாண்டுகள் அரங்கத்தின் 100ஆம் நாள். பொங்கல் வழங்கி கொண்டாடப்பட்டது. அன்றைய நாள் நிகழ்வுகளை திருமிகு. சுந்தர்ராஜன் ஒருங்கிணைத்தார்.

ஜனவரி 11: சீடு செந்தமிழ் நூலகவகுப்பு குழந்தைகளுக்காக கதையருவி கதை அட்டைகள் அறிமுகம் செய்யப்பட்டன. சிறு சிறு கதைகளை குழந்தைகள் ஆர்வமுடனும், வேகத்துடனும், உற்சாகத்துடனும் உரத்தும், மௌனமாயும் வாசித்து மகிழ்ந்தனர். அன்றைய நாளினை பாஸ்கர் ராஜா வழி நடத்தினார்.

ஜனவரி 12: வாண்டுகள் அரங்கம் பொங்கல் நாளை முன்னிட்டு வெள்ளையடிக்கப்பட்டது.

ஜனவரி 14: மீனாள் அம்மையார் தலைமையில் பொங்கல் விழாவை சீடு அறக்கட்டளை குழந்தைகள் கோலகலமாக கொண்டாடினர். அன்று குழந்தைகள் விரும்பும் விதமாக விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன.

ஜனவரி 16: தேடல்கள் – கல்லூரி மாணவர்கள் ஒரு குழுவாகவும் பணிக்கு செல்லும் இளைஞர்கள் ஒரு குழுவாகவும் அமைப்பதற்கான பிரச்சாரத்தை திருமிகு. மோகன் கரும்பாலையில் துவக்கினார்.

ஜனவரி 24: தேடல் பெத்து சகோதரர் திருமண விழாவில் சீடு அங்கத்தினர் பங்கேற்றனர்.

ஜனவரி 26: வாண்டுகள் அரங்க தொண்டர்கள் கணேஷ் பாபு, தங்கவேலாயுதம் ஏற்பாட்டில் திருமிகு. அன்பரசன் தலைமையில் குடியரசு தினவிழா கொண்டாட்டம் நடந்தது. அன்று சீடு குழந்தைகள் உரிமைகள் இயக்க தலைவர் திருமிகு. சுரேஷ்ராஜன் தலைமைவிருந்தினராய் பங்கேற்றார்.

பிப்ரவரி 5: ஹீனா நந்தானி பிரேம்குமார் அவர்கள் சீடு அறக்கட்டளை அலுவலகத்துக்கு ஒரு கணினி ஒன்றை வழங்கினார்கள். அவர்களுக்கு சீடு டிரஸ்ட் சார்பில் நெஞ்சார்ந்த நன்றிகள் தெரிவிக்கப்பட்டன.

பிப்ரவரி 6, 7, 8: புதுயுகம் இதழ் பயிலரங்கு நடைபெற்றது. பயிற்சியளித்தவர் கார்த்திக் பாரதி.

பிப்ரவரி 10: திருமிகு. முத்துகுமார் சீடு டிரஸ்ட் இயக்குநராக பொறுப்பேற்றார். சீடு டி ர ஸ் ட் அரங்கத்தினர் அவரை வரவேற்று வாழ்த்துக்கள்தெரிவித்தனர்.

பிப்ரவரி 12: திருமிகு. கார்த்திக்பாரதி தலைமையில் சீடு பணியாளர்கள் மற்றும் தொண்டர்கள் கூட்டம். இயக்குநர் முத்துகுமார் ஒருங்கிணைத்தார்.

பிப்ரவரி 13: செந்தமிழ் நூலக அரங்கத்தில் பாஸ்கர் ராஜா கதையருவி அட்டையினை கொண்டு கதையை வாசிக்கும் பயிற்சியை வழங்கினார்.

பிப்ரவரி 15: தேடல் இளைஞர் சுய உதவிக்குழு ஆலோசனை கூட்டத்தில் மோகன் தலைமையில் இளைஞர்கள் கூடி ஆலோசித்தனர்.

பிப்ரவரி 18: சீடு அமைப்பின் நெடுநாளைய நண்பர் ஆலோசகர் திருமிகு. இக்பால் இல்ல திருமணவிழாவில் பெரும்பாலான சீடு அங்கத்தினர் பங்கு கொண்டனர்.

பிப்ரவரி 19: புதுயுகம் ஆசிரியர்குழு அருண்குமார். தனது பிறந்த நாளை சீடு டிரஸ்ட்-க்கு இரு புத்தகங்கள் வழங்கி கொண்டாடினார்.

பிப்ரவரி 20: வாண்டுகள் அரங்க குழந்தைகள் முத்துகணேஷ் தினேஷ்குமார் பெற்றோர், சீடுக்கு இரு கேரம்போர்டுகளை தினேஷ்குமார் பிறந்தநாளுக்காக வழங்கினர்.

பிப்ரவரி 22: கரும்பாலை +2 மாணவர்களுக்கு உயர்கல்வி வழிகாட்டலுக்கான வகுப்பு நடத்தப்பட்டது. நடத்தியவர் திருமிகு. அ.ச.கார்த்திக்பாரதி

பிப்ரவரி 25: தேடல் சுய உதவிக்குழு கூட்டம்

பிப் 26,27: பத்தாம் வகுப்பு தமிழ் இரண்டாம் தாளுக்கான பயிலரங்கை திருமிகு.கார்த்திக் பாரதி நடத்தினார். எளிமையான இலக்கண வழிகள், மனன முயற்சிகள் தேர்வு உத்திகள் கற்றுத் தரப்பட்டன.

மார்ச் 1: காலை 7.30 மணிக்கு பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத்தேர்வு துவங்குவதை முன்னிட்டு கூட்டு வழிபாடு தேர்வு டிப்ஸ் வழங்குதல் நிகழ்ந்தன. காலை உணவுடன் நடந்த இந்நிகழ்வு மனநிறைவாய், மாணவர்கள் மகிழும் வண்ணம் நிறைவு பெற்றது.

மார்ச் 8: பெண்கள் தினவிழாவை முன்னிட்டு திருமிகு. இயக்குநர் முத்துகுமார் குழந்தைகளுக்கு பாடல் கற்பித்தார் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

மார்ச் 9: காந்தி மியூசியம் குமரப்ப குழலில் சுடு பெண்கள் வாசிப்பரங்கம் - பெண்கள் வாழும் வரலாறு குரல் பதிவுகள் என்ற நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தது. புதுயுகம் ஆசிரியர் குழு கலந்து கொண்டது. பழங்குடி இன பெண் : நாகம்மாள் (தேர்தலில் நின்றமைக்காக கணவனை பிரிந்தவர்), குருவம்மாள் காட்டு நாயக்கர் இனப்பெண் (தன் சாதியினர்க்கு சாதி சான்றிதழ் கேட்டு போராடுபவர்) 83 வயது காந்திமதி (சமூக சீர்திருத்தவாதி, கலப்பு மணம் கண்டவர்), குமரேஸ்வரி (IAS நிறுவனம் நடத்துபவர்), சுபைதா (முஸ்லீம் பெண்கள் ஜமாத்தை உருவாக்கியவர்), அமுதா காந்தி (தியாகம் பெண்கள் அமைப்பு நிறுவனர்) போன்ற பெண்மணிகள் தாங்கள் வாழ்ந்த கதையை சந்தித்த துன்பங்களை அடைந்த சாதனைகளை செய்யப்போகும் பணிகளை பார்வையாளர்களிடம் அவர்களின் மொழியிலே பேசினர். திரளாக கூடியிருந்த கூட்டம் நிறைந்த தன்னம்பிக்கையுடனும் செய்ய வேண்டிய வேலைகள் இன்னும் ஆயிரமாயிரம் என்பதை உணர்த்துவது போலவும் கூடியிருந்தது.

மார்ச் 11: காலை-சீடு முன்னாள் மாணவி லதாவுக்கு கோலகலமாய் திருமண வரவேற்பு தேனீர் விருந்துடன் நடைபெற்றது.

மாலை: புதுயுகம் முதல் இதழ் வெளியீட்டு விழா கரும்பாலை மாநகராட்சி நடுநிலை பள்ளியில் கோலகலமாக நடைபெற்றது.

மார்ச் 10,24: மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் சீடு டிரஸ்ட் சார்பாக ஓவியம் படைப்பாக்கத்தில் குழந்தைகள் ஈடுபட்டனர்.

மார்ச் 26, 27: வாண்டுகள் அரங்கத்தில் குழந்தைகள் கதை, கட்டுரை, ஓவியம் போன்றவைகளில் எழுத, வரைய பயிற்றுவிக்கப்பட்டனர்.

மார்ச் 14: கரும்பாலை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி கற்றல்திறன் குறைந்த மாணவர்களுக்கு பயிற்சியளிக்கும் வகுப்புகளை கார்த்திக்பாரதி துவக்கினார்.

மார்ச் 17: லேடி டோக் ஆண்டு விழா கொண்டாட்டத்தில் கனவுகள் அரங்க மாணவர்கள் மற்றும் சீடு அறங்காவலர்கள் பங்கேற்றனர். அம்பிகா, கயல்விழிக்கு சீடுடிரஸ்ட் வாழ்த்துக்களை தெரிவித்தது.

தலித் ஆதார மையம் சார்பில் தலித் கலைவிழா, மதுரை இறையியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. சீடு கனவுகள் அரங்க மாணவர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர். பாரம்பரியமிக்க கலைகளை பார்ப்பதிலும் சமூக அடக்குமுறைக்கு எதிரான கருத்துகளை கேட்பதிலும் பெருத்த உற்சாகம் கொண்டனர். புதுயுகம் இதழ் சுமார் 100 விற்பனையானது. சீடு தேடல் உறுப்பினர்கள் குழந்தைகள் உரிமைகளுக்கு ஆதரவான துண்டு பரசுரங்களை விநியோகித்தனர்.

மார்ச் 19: தல்லாகுளம் பள்ளி செல்லும் வழியில் இருந்த ஆபாச வசனங்களை அழிக்கும் பணிகளில் சீடு கனவுகள் –அரங்க மாணவர்கள் ஈடுபட்டனர்.

அணைப்பட்டி சுற்றுலா, முத்துகுமார் தலைமையில் நடத்தப்பட்டது. சீடு கனவுகள் அரங்க குழந்தைகளுக்கு பாட்டு விளையாட்டு போன்றவை கற்றுத் தரப்பட்டது. அணைபட்டியில் உள்ள சிறு அணை தண்ணீரில் குழந்தைகள் வெகு நேரம் ஆட்டம் போட்டனர். குழந்தைகள் விரும்பிய நாளாக அமைந்தது.

மார்ச் 22: 10–ஆம் வகுப்பு மாணவர்களுக்கான பொதுத்தேர்வு டிப்ஸ் வழங்குதல் கூட்டுவழிபாடு. தலைமை: கார்த்திக் பாரதி.

மார்ச் 23: நீர் நாள் அனுசரிப்புத் தினம் திருச்சியில் இயக்குநர் முத்துகுமார் பங்கேற்பு.

தமிழர் பண்பாட்டு கழகம் சார்பில் அமெரிக்க வல்லாதிக்க எதிர்ப்பு கலைவிழா பகத்சிங் நினைவுநாளை முன்னிட்டு நடந்தது. சீடு அங்கத்தினர் பெருமளவில் பங்கேற்றனர். கனவுகள் அரங்கம் புதுயுகம் இதழ்களை விற்பனை செய்து ரூ.300 ஈட்டியது. தேடல் பிரிவு துண்டு பிரசுர விநியோகத்தை செய்தது.

புதுயுகம் ஆசிரியர் குழு, லெனின், சேகுவரா மற்றும் விழிப்புணர்வு கதைகள் போன்ற அரிய CD களையும், புத்தகங்களையும் வாங்கி வந்தனர்.

மார்ச் 25: சோழவந்தான் ரயில் பயணம் மற்றும் சிற்றுலா வாண்டுகள் அரங்கம் மற்றும் கனவுகள் அரங்கம் குழந்தைகள் இயக்குநர் முத்துகுமார் மற்றும் சுந்தர்ராஜன், அன்பரசன் தலைமையில் சென்று வந்தனர்.

மார்ச் 27: கோடை விடுமுறை திட்டமிடல் கூட்டம்.

மார்ச் 28: சீடு பணியாளர் கூடுகை.

மார்ச் 30: திருமிகு. ஈவிலின் மாசிலாமணியுடன் சந்திப்பு.

மார்ச் 31: செந்தமிழ் நூலக கட்டிடத் திட்டமிடல் கூட்டம்.

பதிவு செய்தவர்கள் : S.முத்துக்குமார், O.G.மணிகண்டன்

# சீடு டிரஸ்ட்

வழங்கும்

## நலிவுற்ற குழந்தைகளுக்கான கோடைகால ஆளுமை மேம்பாட்டு முகாம்

## மே மாதத்தில் எதிர்பாருங்கள்.

கரும்பாலை, சம்பக்குடி, தத்தனேரி, மானகிரி,

S.M.நகர், இந்திரா நகர், P.T.காலனி குழந்தைகள்

தங்கள் பெயரினை பதிவு செய்து கொள்ளலாம்.

தொடர்புக்கு: 98438 79066, 9894805446

விரைவில் முகாம் நடைபெறும் நாளும், இடமும் அறிவிக்கப்படும்.

---

**குழந்தைகள் தங்கள் படைப்புகளை கதை, கவிதை, துணுக்கு, நகைச்சுவை, கட்டுரை, ஓவியம் தாங்கள் சந்தித்த அனுபவங்கள் ஆகியவற்றை புதுயுகத்திற்கு அனுப்பலாம்.**

| | |
|---|---|
| *வாண்டுகள் அரங்கம்* | *1முதல்4ஆம் வகுப்புகள்* |
| *வேர்கள் அரங்கம்* | *5 முதல் 8 ஆம் வகுப்புகள்* |
| *கனவுகள் அரங்கம்* | *9 முதல் 12 ஆம் வகுப்புகள்* |
| *தேடல்கள் அரங்கம்* | *கல்லூரி & பிற இளைஞர்கள்* |


*Publishers* Mr. A.S.KarthikBharathi 9894805446 — Mr. K.P.Anbarasan 9894918130

*Honorary Editor* Mr. S.Muthukumar 98438 79066 — *Editor* Mr. C.T.Premkumar 9944101615

*Editorial Board* S.I.Patel, C.T.Arunkumar, C.K.Karbagajothi, M.S.Thangalakshmi

*Communication Address* PUDHUYUGAM - MONTHLY, SEED TRUST
Arjun Shanmuga Illam, 439/1, East Street, Karumbalai, Madurai-20.
Ph: 0452 - 6456503, askb_seednarpanigal_2000@yahoo.com .

ஸ்ரீ முத்தன் பிரிண்டர்ஸ், 13, E2, E2 ரோடு, C.S.I. சர்ச் பின்புறம், மதுரை - 625 002. போன்: 3256908, 9865935571

வண்ணங்கள் அரங்கம் வேர்கள் அரங்கம் கனவுகள் அரங்கம்



# ஸ்ரீ குழந்தை உரிமைகள் இயக்கம்

## இனிய குழந்தைகள் உலகம் படைப்பதற்கான முயற்சி!

புதுயுகம் தனிச்சுற்று சிற்றிதழ் – சீடிரஸ்ட் வழிகாட்டலால் 15 வயது முதல் 17 வயது நிரம்பிய குழந்தைகளால் வளமைக் கல்வி நோக்கில் நடத்தப்படுகின்றது.